கொண்டாநகரம் ஊராட்சி தலைவர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை திருமதி ஆ.சொர்ணம்

ந.க.எண் 008/2023-24 நாள் : 20.02.2024

பொருள் குடியிருப்பு மனைப்பிரிவு திருநெல்வேலி மாவட்டம்
பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியம் கொண்டாநகரம் ஊராட்சி
அனுமதி மற்றும் DTCP தொழில் நுட்பஒப்புதல் ம/வ/திஉதிகு..எண் SWP75/2023
மற்றும் வரைபடங்களுக்கு ம/வ /தி.மா.அ.எண் SWP123/2023
இறுதி ஒப்புதல் வழங்குதல் தொடர்பாக
பார்வை 1) அரசாணை (நிலை) எண் 71 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை நாள் 15.08.2003.
2) அரசாணை (நிலை) எண் 255 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை நாள் 18.08.1997.
3) இணை இயக்குநர்/ உறுப்பினர் செயலர் (பொறுப்பு) திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் கடித ந.க.எண் QGIPCEC3/2023/TCP/2023/TCP
4) ஊராட்சி தீர்மானம் எண் 176/20/02/2024.

உத்திரவு

திருநெல்வேலி மாவட்டம் பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியம் கொண்டாநகரம் ஊராட்சி சர்வேஎண் 445/2A , 446/2 6477 சதுரமீட்டர் (1.60 ஏக்கர்) பரப்பளவில் அமையவுள்ள 39 குடியிருப்பு மனைப்பிரிவிற்கு' உறுப்பினர் செயலர் (பொறுப்பு) திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களால் ம/வ/தி.மா.அ.எண்) மனைப்பிரிவு எண் SWP123/2023 என்ற எண்ணில் நிபந்தனைகளுடன் தொழில் நுட்ப ஒப்புதல் மற்றும் வரைபடங்களுக்கு ம/வ/தி.மா.அ.எண் SWP75/2023 என்ற எண்ணில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இம்மனைப்பிரிவு 6477 சதுர மீட்டர் பரப்பில் அமைந்துள்ளது. இகில் 39 மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இம்மனைப்பிரிவில் உள்ள 1759.73 சதுரமீட்டர் பரப்பளவு சாலைகள். பொது உபயோகம் 28.43 சதுரமீட்டர் (0.60%) பரப்பளவுள்ள நிலம் TANGEDCO 33.93 சதுரமீட்டர்(0.72%) பரப்பளவுள்ள நிலம் TNCDBR-2019 விதி 47(6) ன் படி பூங்காவிற்கு 471.727 சதுரமீட்டா பரப்பளவிற்கு ஈடான அரசு வழிகாட்டி மதிப்பு தொகை 5,84,908 நாள் 08-11-2023 அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது ஊராட்சிக்கு ஒதுக்கப்பட்ட நிலங்கள் தான பத்திரம் ஆவண எண்4820/2023 , நாள் 02.11.2023ன் தானமாக வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட மனை பிரிவிற்கு கீழ்கண்ட விவரப்படி மனை பிரிவு உரிமையாளரால் கட்டணங்கள் செலுத்தப் பட்டுள்ளது

கொண்டாநகரம் ஊராட்சிக்கு Layout கட்டணமாக 6477 சதுர மீட்டருக்கு ரூபாய் 2000 ஊராட்சியில் ReceiptNo 3582 நாள் 20-02-2024ன் படி செலுத்தப்பட்டுள்ளது.எனவே பின்வரும் நிபந்தனைகளுடன் இக்குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதிஒப்புதல் வழங்கப்படுகிறது.

5) உறுப்பினர் செயலர் (பொறுப்பு) திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் ந.க.எண் QGIPCEC3/2023/TCP/2023/TCP குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்

6) மேற்படி கடிதத்துடன் வரப்பெற்ற கோப்பு ந.க.எண் QGIPCEC3/2023/TCP/2023/TCP திலி மா அ நாள் 21/11/2023 மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி செயல்பட வேண்டும்.

7) மனைப்பிரிவிற்கு Layout கட்டணம் செலுத்தியதில் வித்தியாச தொகை ஏதேனும் செலுத்த வேண்டியது பின்னர் அறியப்பட்டால் அதனை செலுத்த வேண்டும்

8) நீதிமன்ற வழக்கு மற்றும் ஏதேனும் வில்லங்கம் இருப்பின் மனுதாரரை சார்ந்ததாகும்.

இணைப்பு
1. நிபந்தனைக் கடித நகல்கள்
2. ஒப்புதல் அளிக்கப்பட்டவரைபடம்

பெறுநர்

S. முத்துராஜ் s/o சொர்ணம்
94 D/6 கோடீஷ்வரன்நகர் திருநெல்வேலி- டவுண்.

ஆ.சொர்ணம்
தலைவர்
ஊராட்சி மன்றம்
கொண்டாநகரம்

நகல்:

1.உறுப்பினர் செயலர் (பொறுப்பு)திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம் திருநெல்வேலி
2.உதவி இயக்குநர் நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் திருநெல்வேலி மாவட்டம்
3.வட்டாட்சியர் திருநெல்வேலி வட்டம் திருநெல்வேலி மாவட்டம்
4.ஊராட்சி தலைவர் கொண்டாநகரம் ஊராட்சி(வரைபடம்) 1.இணைப்பு